**சம்பங்கி**

1. **மொட்டு துளைப்பான், ஹெலிகோவெர்பா ஆர்மிஜெரா:**

   **சேதத்தின் அறிகுறி:**

   - இந்தப் பூச்சி மெதுவாக பூக்களைத் தாக்கும்
   - புழுக்கள் மொட்டுகள் மற்றும் பூக்களை துளைத்து செல்லும்
   - மொட்டுக்களில் உள்ளிருப்பவைகளை உண்ணும்

   **கட்டுப்படுத்தும் முறை:**

   - தாக்கப்பட்ட மொட்டுகளை சேகரித்து அழித்துவிடவும்
   - விளக்குப்பொறி வைத்து அந்துப்பூச்சியை அழித்துவிடலாம்
   - என்டோசல்பான் 0.07 சதவிதம் (அ) மிதைல் பாரத்தியான் 0.05 சதவிதம் மருந்தினை முட்டைகள் தழைகளிலும், மொட்டுகளிலும் காணப்படும்பொழுது தெளிக்கவும்
   - வேப்பம் எண்ணெய் 0.5 சதவிதம் தெளித்தால் பூச்சிகளை விரட்டும்

2. **அசுவினி, ஏபிஸ் கிராசிவோரா:**

   **சேதத்தின் அறிகுறி:**

   - குஞ்சுகளும் பூச்சிகளும் மொட்டுகளிலும், இலைகளிலும் தாக்கும்

   **பூச்சியின் விபரம்:**

   - பூச்சி சிறியதாகவும், மென்மையான உடலைக் கொண்டும், கருப்பு நிறத்தில் தோன்றும்

   **கட்டுப்படுத்தும் முறை:**

- மாலத்தியான் 0.1 சதவிதம் தாக்கப்பட்ட இலைகளில் தெளிக்கவும்

3. **வெட்டுக்கிளி, அட்ரேக்டோமார்பா ரெனுலேட்டா:**

**சேதத்தின் அறிகுறி:**

- இளம் இலைகளையும் மொட்டுகளையும் உண்ணும்
- தாக்கப்பட்ட தாவரங்கள் அதன் நளினத்தை இழந்து காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கார்பரில் 5 சதவிதம் போட்டால் தாக்கம் ஏற்படுத்துவதை தடுக்கலாம்
- முட்டைக்குவியல்களை வெளியேத் தெரியும்படி சுரண்டி இயற்கை எதிரிகள் உண்ணுவதற்கு வழிவகுக்கலாம்
- நாற்றங்காளில் வலை போட்டால் இதன் தாக்குதலைக் கட்டுப்படுத்தலாம்
- குயினால்பாஸ் 0.05 சதவிதம் (அ) மாலத்தியான் 0.1 சதவிதம் (அ) கார்பரில் 0.2 சதவிதம் தெளித்தால் தாவரங்களை பாதுகாக்கலாம்

4. **சிவப்பு சிலந்தி, டெட்ரானைக்கஸ் உர்டிகே**

**சேதத்தின் அறிகுறி:**

- இலைகளின் அடிப்பகுதியில் சிலந்தியில் தோன்றும்
- இலைகளை கொத்துகளாக்கும் சிலந்திகள் சாறு உறிஞ்சுவதால் மஞ்சள் கோடுகள் இலைகளில் தோன்றும்
- தாக்கப்பட்ட இலைகள் மஞ்சளாகிவிடும்

**பூச்சியின் விபரம்:**

- சிவப்பு (அ) பழுப்பு நிறத்தில் சிலந்திகள் காணப்படும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- டைக்கோபால் 2மி.லி / லிட்டர் தெளித்தால் கட்டுப்படுத்தலாம்

5. **எலிகள்:**

**சேதத்தின் அறிகுறி:**

- எலிகள் சம்பங்கி வயலில் குழிகள் தோண்டி சேதத்தை ஏற்படுத்தும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- வயலில் நச்சுப்பொறி வைத்தால் எலித் தொல்லையைக் கட்டுப்படுத்தலாம்
- வெளிச் சந்தையில் ரோபான் என்ற பெயரில் கிடைக்கும்

6. **கூன்வண்டுகள், மில்லோசெரஸ் வகை:**

**சேதத்தின் அறிகுறி:**

- புழுக்கள் வேர்களை உண்ணும், கிழங்குகளில் துளையிட்டு சேதப்படுத்தும்
- வண்டுகள் இரவில் உண்பவை அவை இலைகளையும், தண்டுகளையும் உண்டு அழிக்கும்
- வண்டுகள் இலைகளின் ஓரத்தில் உண்ணும்

**கட்டுப்படுத்தும் முறை:**

- கார்பரில் 10 சதவிதம் மண்ணில் போட்டால் கட்டுப்படுத்தலாம்